## மூன்றாம் நிலைப் பராமரிப்பு மையத்தின் ஒருங்கிணைந்த தரவுத் தளத்தைப் பயன்படுத்தி கோவிட் தொற்று சந்தேகிக்கப்படுகின்ற அல்லது உறுதியாகியுள்ள நபர்கள் பற்றிய உற்றுநோக்கல் பயிலுகைகள்.

## குழந்தை மருத்துவத்திற்கான நோயாளித் தகவல் தாள்

கொரோனோ வைரஸ் நோய் (கோவிட்-19) ஒரு தொற்றுநோய். அது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் சார்ஸ் கோ-வி2 என்பதால் ஏற்படுகிறது. இந்த வைரஸ் உலகத்தில் பல நாடுகளுக்கும் பரவி உலகளாவிய உடல்நல நெருக்கடியை உருவாக்கியுள்ளது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். சிறார்களில் இதன் மருத்துவ வெளிப்பாடுகள் கடுமையாக இல்லை என்று தெரிய வந்தாலும், அவை பெருகிவருகின்றன. சிறார்களில் இந்தத் தொற்றின் முழுத் தாக்கத்தை நம்மால் இன்னும் அறிந்துகொள்ள இயலவில்லை. ஆகவே நமது மருத்துவமனைகளில் காணப்படும் சிறார்களிடமிருந்து ஒழுங்குபட்ட முறையில் எந்த அளவு அதிகமாகத் தகவல்களைத் திரட்ட முடியுமோ அந்த அளவு திரட்டிக் கொள்வது முக்கியமானது.

இந்த நோயின் பலவேறு தன்மைகளை-அறிகுறிகள், ஆய்வகச் சோதனைகள், நோய் செல்முறை, சிக்கல்கள், சிகிச்சையினால் ஏற்படும் எதிர்வினைகள், சமுதாயத்தில் தொற்றின் பரவல் மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மையின் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தப் புதிய தொற்றின் பற்றிய ஆய்வு வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரியில் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

உங்கள் குழந்தைக்கு இந்தத் தொற்று இருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதால், அல்லது இது வளரும் அபாயத்தில் இருப்பதால் உங்கள் குழந்தை இந்த ஆய்வில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் குழந்தையிடம் இந்த நோய் வளர்ந்துவருவதை மிக அணுக்கமாகக் கண்காணிப்பதையும், வழக்கமான அல்லது குறிப்பாக இந்த நோய்க்கு மட்டுமே உரிய புலனாய்வுகளுக்கு விளக்கம் தேடுதல், இதன் கடுமையையும் சிகிச்சைக்கு எதிர்வினையையும் கோவிட்-19 தொற்றின் நோயெதிர்ப்புத் தன்மையையும் கணக்கிடுதல் ஆகியவற்றை இந்த ஆய்வு உள்ளடக்கியுள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட முறையில் உங்கள் குழந்தைக்குச் சிகிச்சை நிகழும். இந்த ஆய்வில் அது பங்கேற்பதைப் பற்றிய உங்கள் முடிவினால் சிகிச்சை மாறாது. இந்த ஆய்வுப் பயிலுகையில் பங்கேற்பதா வேண்டாமா என்று முடிவெடுக்கும் முன்னதாகப் பின்வரும் தகவலைப் படிப்பதற்குப் போதிய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். இந்தப் படிவத்திலோ அல்லது இந்த ஆய்வுப் பயிலுகை யிலோ கூடுதலான தகவலோ, தெளிவோ வேண்டு மெனில் நீங்கள் இந்த ஆய்வுப் நிகழ்த்துநரிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதை வரவேற்கிறோம். நீங்கள் பங்கேற்பதாக

முடிவுசெய்தால், இதிலிருந்து நீங்கள் எவ்விதப் பின்விளைவும் இன்றி எந்த நேரத்திலும் விலகிக் கொள்ளலாம் என்பதை மனத்தில் கொள்ளுங்கள்.

இந்த ஆய்வில் உங்கள் குழந்தை பங்கேற்க ஒப்புக் கொண்டால், இந்த ஆவணத்தின் கடைசிப் பக்கத்திலிருக்கும் ஒப்புதல் படிவத்தில் நீங்கள் கையெழுத்திட வேண்டும். இந்த ஆவணம், தகவல் தாளையும் ஒப்புதல் படிவத்தையும் கொண்டுள்ளது. எல்லாப் பக்கங்களையும் நீங்கள் படித்துப் புரிந்து கொண்டீர்கள் என்பதை அன்புகூர்ந்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

**இந்த ஆய்வின் நோக்கம் என்ன?**

கோவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ள அல்லது இருப்பதாகச் சந்தேகிக்கப் படுகின்ற சிறார்களின் மருத்துவ அம்சங்கள், ஆய்வக அளவுருக்கள், விளைவு ஆகியவற்றை ஆராய நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

**இந்த ஆய்வில் உங்கள் குழந்தை பங்கேற்கும்போது என்ன ஆகும்?**

இந்த ஆய்வில் உங்கள் குழந்தை பங்கேற்கும்போது என்ன ஆகும்? இந்த ஆய்வுக்கு ஒப்புக் கொள்ளும்போது, நீங்கள் பின்வரும் தகவல்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ளவும் மருத்துவமனையில் உங்கள் குழந்தை இருக்கும் வரையில் எங்களுக்குத் தேவைப்படும் மாதிரிகளை நாங்கள் எடுத்துக் கொள்ளவும் சம்மதிக்கிறீர்கள்.

1. பங்கேற்பாளர் விவரங்கள் (உங்கள் குழந்தையின் வயது, பாலினம், சமூகபொருளாதார அந்தஸ்து, தங்கியிருக்கு மிடம் உள்ளிட்டவை)
2. இந்த மருத்துவமனைக்கு வரநேர்ந்த மருத்துவ வரலாறு
3. தேவைப்படும் வரலாறு
    i. கொரோனா வைரஸ் தொற்று அறியப்படும் நோயாளியின் பயணம் மற்றும் மறைப்பற்ற நிலை வரலாறு
    ii. மருந்தளிப்பு வரலாறு
    iii. உடன்-நோய்கள் வரலாறு
4. ஆய்வக மாதிரிகள்
    i. இரத்தம்: வழக்கமான இரத்த மாதிரிகள் அன்றி, வைரஸ் தொற்று தொடர்பான சிறப்புச் சோதனைகளுக்கும் இரத்தம் சேகரிக்கப்படும். இதில் வைரஸின் ஆன்டிபாடி (கிருமியெதிரி) நிலை, வைரஸின் சுமை, நோய் எதிர்ப்பு வினை, உடல்செயல்பாடுகளை கணிக்கத் தேவையான இரத்தச் சோதனைகள் ஆகியவை அடங்கும்.

ii. துடைப்புத்துணி: சுவாச மாதிரிகளில் நிகழ்த்தப்பட்ட ஆர்டி-பிசிஆர் சோதனையில் இந்த வைரஸ் கண்டறியப்படுகிறது. இந்த மாதிரியை மூக்கு, வாய், மூச்சுக்குழாய்வழி ஆகியவை துடைத்ததுணியால் எடுக்கலாம். (மோசமாகும் நுரையீரல் நிலையால் நோயாளி மூச்சுக்குழல் குழாய் செலுத்தப்பட்டிருந்தால் மட்டுமே மூச்சுக்குழாய்வழி மாதிரி எடுக்க வேண்டும்.)

எடுக்கப்படும் இரத்தம் மிகக்குறைவாகவே இருக்கும், அது உங்கள் குழந்தைக்கு எவ்வித முக்கிய அசவுகரியத்தையும் உண்டாக்காது என்று நாங்கள் உறுதியளிக்கிறோம். எல்லா மாதிரிகளின் சேகரிப்பும் அனுபவம் மிக்க உடல்நலப் பணியாளர்களால் மட்டுமே செய்யப்படும்.

5. பிற புலனாய்வுகள்:

குழந்தையின் நுரையீரல் மற்றும் இதயச் செயல்பாட்டை அறிய, மார்புக்கூட்டு எக்ஸ்ரே, எக்கோ-கார்டியோகிராம் கள் (இதயச் செயல்பாட்டைக் காட்டக்கூடியது) ஆகியவை குழந்தை மருத்துவமனையில் தங்கியிருக்கும்போது நிகழ்த்தப்படக்கூடும். இந்த இரு சோதனைகளுமே மருத்துவத்தில் குறுக்கிடாதவை, உங்கள் குழந்தையை காயப்படுத்தாதவை.

6. மருத்துவமனையில் உங்கள் குழந்தையின் மருந்தளிப்பு முறை நன்கு கண்காணிக்கப்பட்டு, தரவுத்தளத்தில் பதியப்படும்.
7. வெளியே அனுப்பப்பட்டால், உங்கள் குழந்தையின் உடல்நல நிலை பற்றித் தொலைபேசியில் தொடருவோம்.

**இந்த ஆய்வில் பங்கேற்பதால் அபாயம் ஏதேனும் உண்டா?**

இரத்தமாதிரி சேகரிக்கும்போது உள்ள வழக்கமான வலியன்றி, வேறு அபாயம் எதுவும் இல்லை. இதில் முன்னங்கையில் இரத்தம் எடுத்த இடத்தில் சிறிய அளவு வலி, இரத்தக்கசிவு, சிறிய கீறல் இருக்கலாம் வழக்கமான சோதிப்புக்கென நாங்கள் தொண்டைநீர் துடைப்பு மாதிரி எடுப்போம். சோதனையின்போது இது கொஞ்சம் அசவுகரியத்தையும் பேசமுடியா நிலையையும் தரலாம். பிற சோதனைகளும் குறைந்தபட்ச அபாயத்தையே கொண்டவை. எவ்விதக் குறுக்கீடும் இல்லாததால் எவ்வித இழப்பீடும் தர இயலாது.

**பங்கேற்பதால் எங்களுக்கு கிடைக்கக்கூடிய பயன் என்ன?**

இந்த ஆய்வு உங்கள் குழந்தைக்கு (உங்களுக்கும் உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும்) எந்தப் பலனும் தரும் என்று கூற முடியாது. ஆனால் இந்த ஆய்வின் மூலமாக நாங்கள் பெறும் தகவல் மற்ற நோயாளிகளுக்கு உதவக்கூடும், இந்தப் புதிய தொற்றினை மேலும் புரிந்துகொள்ளவும் அதனோடு தொடர்புடைய சிகிச்சை மேம்பாட்டிற்கும் உதவக் கூடும்.

**இந்த ஆய்வு தொடங்கியபிறகு அதிலிருந்து வெளியேற முடியுமா?**

*பங்கேற்பது என்பது உங்கள் சொந்த விருப்பத்தைப் பொறுத்தது. இந்த ஆய்விலிருந்து நீங்கள் எப்போது வேண்டுமானாலும் விலக முடியும். அப்படி நேர்ந்தால், இது மருத்துவ மனையில் உங்கள் குழந்தையின் வழக்கமான சிகிச்சையை எந்த விதத்திலும் பாதிக்காது.*

**சோதனைக்கு நான் பணம் செலுத்த வேண்டி வருமா?**

*நிறுவன விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப நீங்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தைத் தவிர அதிகமாக எதுவும் பணம் செலுத்தவேண்டியதில்லை. ஆய்வின் ஒரு பகுதியாகச் செய்யப்படும் கூடுதல் சோதனைகள் கட்டணமின்றிச் செய்யப்படும்.*

**ஆய்வு முடிந்ததும் என்ன ஆகும்?**

*பங்கேற்பாளர்கள் எல்லாரிடமிருந்தும் சேகரிக்கப்பட்ட தகவலைப் பகுப்பாய்வு செய்து, கோவிட்-19 தொற்றுக்கே உரிய குறித்த வடிவப்பாணிகளைக் கண்டுபிடிக்கமுடியுமா என்று பார்ப்போம்.*

**என் குழந்தையின் தனிப்பட்ட தகவல்கள் அந்தரங்கமாக வைக்கப்படுமா?**

*ஆய்வில் பங்கேற்பு என்பது மிகவும் அந்தரங்கமானது, அது ஆய்வாளர்களுக்கு மட்டுமே தெரியும்.*

*இந்த ஆய்வின் முடிவுகள் ஒரு மருத்துவ சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும், ஆனால் முடிவுகளை ஆராய்கின்ற எந்தப் பிரசுரத்திலும் காட்சிப்படுத்தலிலும் எவரும் உங்கள் குழந்தையின் பெயரைக் கொண்டு அதை அடையாளப் படுத்த மாட்டார்கள்.*

*உங்களுக்குக் கேள்வி ஏதேனுமிருப்பின், இவரைத் தொடர்பு கொள்ளவும்*

*டாக்டர் தீப்தி குப்தா*
*துணைப் பேராசிரியர்*
*குழந்தை மருத்துவத் துறை*
*கிறித்துவ மருத்துவக் கல்லூரி, வேலூர்*
child1@cmcvellore.ac.in

*டாக்டர் லெனி ஜி. மாத்யூ*
*பேராசிரியர்-துறைத்தலைவர்*
*குழந்தை மருத்துவத் துறை*
*கிறித்துவ மருத்துவக் கல்லூரி, வேலூர்*
child1@cmcvellore.ac.in

*மொபைல் (அலைபேசி) எண்::* 8300205529